**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**
**S.C. No.93/2024**
**PW4**

| | | |
|---|---|---|
| **Name** | : | J.C. சாந்தி |
| **Father's Name** | : | ஜான் சின்னதம்பி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 13.11.2025.
A1, 2 absent. Petition u/s 317 crpc allowed.

**முதல் விசாரணை**

நான் தற்போது மேல்செங்கம் காவல் வட்ட ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 16.09.2022 அன்று காவல் உதவி ஆய்வாளர் தருமன் என்பவர் நிலைய பொருப்பில் இருந்த போது அவருக்கு கிடைத்த ரகசிய தகவல் படி ஆய்வாளரின் அனுமதியுடன் செங்கம் டு நீப்பந்துறை சாலை அத்திப்பாடி கிராமத்திற்கு சென்று கூட்ரோடு இருந்த எதிரி நவீன்ராஜ், வினோத்குமார் ஆகியோரை விசாரணை செய்து சோதனை செய்தபோது எதிரி வினோத்குமாரிடம் 250 கிராம் கஞ்சா இருந்தது தெரியவந்தது. அதில் தலா 25 கிராம் தனியாக பிரித்து ரசாயன பரிசோதனைக்கு எடுத்துகொண்டார். அதை S1, S2 என்று குறியீடு செய்து மீதமுள்ள 200 கிராமை P1 என குறியீடு செய்து 13.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். பின்னர் எதிரியை கைது செய்து எதிரி வினோதகுமாரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றுள்ளார். எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 250/2022 பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(A) of NDPS Act மற்றும் 328 r/w 511 இதச படி வழக்கு பதிவு செய்துள்ளார். கைப்பற்றப்பட்ட மாதிரி கஞ்சா பொட்டலங்களை ரசாயன பரிசோதனைக்கு நீதிமன்றம் மூலம் அனுப்பி அறிக்கை பெற்றுள்ளார். அந்த வழக்கை நான் மேல் விசாரணைக்கு எடுத்துகொண்டு சாட்சிகளை விசாரித்தேன். அவர்கள் உதவி ஆய்வாளர் தருமனிடம் சொன்னது போலவே சொன்னாதால் நான் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. என்னிடம் காண்பிக்கப்டுவதுதான் வேலூர் வட்டார தடவியல் அறிவியல் ஆய்வகத்தில் பெறப்பட்ட பகுப்பாய்வு அறிக்கை அது **அ.த.சா.ஆ.**5. மீதமுள்ள 200 கிராம் கஞ்சாவை செங்கம் நீதித்துறை நடுவரிடம் அழிப்பதற்கு உத்தரவு பெற்று மேல்

நடவடிக்கை எடுத்தேன். அந்த உத்தரவு **அ.த.சா.ஆ.**6. பின்னர் குற்ற வழக்குகள் உதவி இயக்குநரிடம் கருத்துரை பெற்று மேற்படி பிரிவுகள் கீழ் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

உதவி ஆய்வாளர் தருமன் எதிரிகளை சம்பவ இடத்தில் கைது செய்து காவல் நிலையத்திற்கு கொண்டு வந்து பின்னர் வழக்கு பதிவு செய்தார் என்றால் சரிதான். உதவி ஆய்வாளர் போதை பொருள் தடுப்பு பிரிவில் வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய உரிய அதிகாரிகளிடம் அனுமதி பெற்று அந்த சட்டத்தின் படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை எடுத்தாரா என்றால் எடுத்தார். கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்று பகுப்பாய்வு தெரிவதற்கு முன்பே உதவி ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றப்பட்ட பொருள் கஞ்சா என்று முடிவு செய்தார் என்றால் அந்த பொருள் கஞ்சா போல் தோன்றியதால் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார். எதிரி வினோத்குமார் ஒப்புதல் வாக்குமூலத்தில் மேற்படி கஞ்சா யாரிடம் இருந்து வாங்கினார்கள் என்று சொல்லியுள்ளார்களா என்றால் அரூரில் உள்ள கோட்டப்பட்டி கிராமத்தில் இருந்து வாங்கி வந்ததாக சொல்லியுள்ளார். கொடுத்தவர் பெயர் சொல்லவில்லை. ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் ஆகியவை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்திலேயே தயார் செய்யப்பட்டது. உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு மடிக்கணிணியுடன் சென்றார். மடிக்கணினியுடன் பிரின்டரும் எடுத்து சென்றுள்ளார். உதவி ஆய்வாளர் தருமன் தனது சாட்சியத்தில் சம்பவ இடத்திற்கு பிரிண்டர் மற்றும் மடிக்கணினியுடன் செல்லவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் சாட்சிகளை யாரையும் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளிடம் உண்மையிலேயே கஞ்சா கைப்பற்றியிருந்தால் சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன் வழக்கு பதிவு செய்துவிட்டு சம்பவ இடம் சென்று விசாரணை மேற்கொண்டு இருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B. C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.